**துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டம் - 2019**

துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 3716–எஸ்ஆர்ஜ இலக்க 2019 சனவரி 17 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்க கற்பனை செய்யப்பட்ட பிராந்திய ஒருமைப்பாட்டு நன்மைகள் வகுக்கப்படுதல் போன்றவற்றில் நேரான விளைவினை வைத்திருத்தல், பொருளாதார செயற்பாடுகளின் மீது நேர்மறை தாக்கமொன்றினை ஏற்படுத்தல் மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்பினூடாக கொழும்பு நகரத்தில் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல், கொழும்பிலிருந்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திற்கு பயணஞ் செய்யும் நேரத்தினை குறைத்தல் மற்றும் துறைமுகத்திலிருந்து கொழும்பின் ஏனைய பிராந்தியங்களுக்கு சரக்கு போக்குவரத்தின் போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். தற்போது எதிர்பார்க்கப்பட்ட குறைவு காரணமாக கொழும்பின் புரநகர் பகுதிகளிளுள்ள போக்குவரத்து நெரிசலினை எளிதாக்குதல் கூட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. 2016 பெப்ரவரி 16 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 360.2 மில்லியன் ஆகும். செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2016 பெப்ரவரி இல் ஆரம்பித்திருந்ததுடன் செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி 2016 மார்ச்சில் பெறப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2025 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியையும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டமானது அதே கட்டிடத்தில் ஏனைய மூன்று செயற்திட்டங்களுடன் செயற்பட்டு வருகின்றது. இருப்பினும், மின்சாரம், தொலைபேசி, நீர், அலுவலகவாடகை, தூய்மையாக்கல் மற்றும் பாதுகாப்பு கட்டணங்கள் போன்ற மேந்தலை கிரயங்கள் செயற்திட்ட கணக்குகளில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. அதன் பெறுபேறாக, செயற்திட்டத்தின் மொத்த கிரயம் மேந்தலையின் பிரித்தொதுக்கப்படாத பங்கினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மொத்த செயற்திட்ட கிரயம் பிரித்தொதுக்கப்படாத தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களுக்கிடையில் பொதுவான செலவுகளை பிரித்தொதுக்குதல் சரியான முறையாக காணப்பட்ட போதிலும், நடைமுறையில் அதனை அமுல்படுத்தும் போது சிரமங்களை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம். | செயற்திட்டங்களிடையே மேந்தலை கிரயங்களை பகிர்ந்தளிக்கும் போது சரியான முறை பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்படைப்பு மற்றும் வட்டி கட்டணங்கள் மொத்தமாக ரூபா 58.49 மில்லியன் வேறாக வெளிப்படுத்தப்படாமல் 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கணக்கிடப்பட்டிருந்தது. | பெறுமதிகளின் உண்மைத்தன்மையினை உறுதிப்படுத்த முடியாமலிருக்கும். | கருத்துரைக்கப்படவில்லை. | ஒப்படைப்பு மற்றும் வட்டி கட்டணங்கள் நிதிக்கூற்றுக்களில் வேறுவேறாக வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

3. பௌதீக முன்னேற்றம்

3.1 செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில்/அமுல்படுத்துவதில் காணப்படும் தாமதங்கள்

| இல | நடவடிக்கை | ஆரம்பிக்க பட்டியலிடப்பட்ட திகதி | ஆரம்பிக்கப்பட்ட திகதி | தாமதம் | விளைவு<br>---------------- | முகாமைத்துவத்தின் கருத்துரைகள்<br>------------------------------ | கணக்காய்வாளர் பரிந்துரைகள்<br>------------------------------ |
|---|---|---|---|---|---|---|---|
| (அ) | பீஏஈஎச் இன் நிர்மானம். | 2018 திசெம்பர் | 2019 செப்தம்பர் 27 | 8 மாதங்கள் | செயற்திட்ட பூர்த்தியாக்கலில் தாமதம் மற்றும் ஒப்பந்த கிரயம் வரம்பு மீறுவதற்கான சாத்தியம். | செயற்திட்ட நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் காணப்பட்ட தாமதம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்திட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடல் சார் வசதி மைய நிர்மானம். | 2019 ஒக்டோபர் | உரிய திகதி வரை ஆரம்பிக்கப்படவில்லை. | 3 மாதங்கள் | மேற்கூறியபடி | மேற்கூறியபடி | மேற்கூறியபடி |
| (இ) | கடல் சார் வசதி மையத்திற்கான பைலிங் வேலைகள். | 2018 திசெம்பர் | 2019 ஜுன் | 7 மாதங்கள் | மேற்கூறியபடி | மேற்கூறியபடி | மேற்கூறியபடி |
| (d) | மின்சார் டொல் முறைமைக்கான ஒப்பந்ததாரரின் பெறுகை. | 2019 ஜுன் | உரிய திகதி வரை கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | 7 மாதங்கள் | மேற்கூறியபடி | மேற்கூறியபடி | மேற்கூறியபடி |

பீஏஈஎச்பீ இன் 2019 இற்கான பெறுகை திட்டத்தின் பிரகாரம் விபரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் அமுல்படுத்தலிற்கான அமைச்சரவை அமைச்சர்களின் அனுமதி 2016 மார்ச்சில் பெறப்பட்டிருந்ததுடன் கடன் உடன்படிக்கையானது 2019 சனவரியில் கையொப்பமிடப்பட்டிருந்தது. இருப்பினும், 2019 ஆம் ஆண்டின் பெறுகைத்திட்டதில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 37,360 மில்லியன் பெறுமதியான 13 நடவடிக்ககைகள் 2019 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் ஆரம்ப கட்டத்தில் சுமார் 8 மாதங்கள் தாமதமாக காணப்பட்டது. அதனடிப்படையில், துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலையின் நிர்மானம் மற்றும் நிர்மான கண்கானிப்பு என்பன இரண்டும் எதிர்பார்க்கப்பட்ட 8 சதவீதத்திற்கு எதிராக 3 சதவீத செயலாற்றலையே அறிக்கையிட்டிருந்தது. துறைமுக கட்டிடத்தின் கட்டுமானம் மற்றும் நிர்மான கண்கானிப்பு மற்றும் கடல்சார்வசதி மையத்தின் பைலிங் நிர்மானம் என்பவற்றிற்கான வடிவமைப்பு எதிர்பார்க்கப்பட்ட 100 சதவீதத்திற்கு எதிராக முறையே 70 சதவீதம் மற்றும் 84 சதவீத செயலாற்றலேயே அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஒப்பந்த கிரயம் அதிகரித்து செல்வதற்கான சாத்தியம். | உடன்படுகின்றேன். துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்திற்கான கருத்துரு சார்ந்த அனுமதி அமைச்சரவை அமைச்சர்களிடமிருந்து 2016 மார்ச்சில் பெறப்பட்டிருந்தது. சரியான சீரமைப்பை தெரிவு செய்தல் மற்றும் துறைமுக செயற்பாடுகளிற்கு ஏற்படும் இடையூறுகளை தவரிப்பதற்கான கப்பல்துறை இட அமைவுகளை நிறுவுதல் என்பவற்றில் பல தெளிவின்மைகள் காணப்பட்டன. மேலும், நடைபாதையில் அதிக பயன்பாட்டு சேவைகள் பயன்படுத்தப்படுகின்றது. இதனால், சீரமைப்பு மற்றும் கப்பல்துறை இடஅமைவு என்பவற்றின் இறுதியாக்கம் திட்டமிடப்பட்ட 6 மாதங்களிற்கு எதிராக 13 மாதங்களை எடுத்திருந்தது. | இலக்கிடப்பட்ட திகதியில் அவைகளை பூர்த்தியாக்க செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை துரிதப்படுத்த செயற்திட்டத்தினால் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடல்சார் வசதிமைய பனிமனையின் பைலிங் வேலைகளின் நிர்மானம் பொறியியலாளர் மதிப்பீட்டு தொகை ரூபா 126.5 மில்லியனிற்கு மேலாக ரூபா 624 மில்லியன் கிரயத்தில் ஒரு ஒப்பந்ததாரரிற்கு வழங்கப்பட்டிருந்தது. இருப்பினும், பொறியியலாளர் மதிப்பீட்டை விட அதிகமாக 25.43 சதவீதமான ரூபா 497.5 மில்லியனிற்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | மேலதிக கிரயங்கள் ஏற்பட்டிருந்தன. | போட்டித்தன்மையான ஏல செயன்முறையில், குறைவாக மதிப்பிடப்பட்ட ஏலதாரர் ஒரு வெற்றிகரமான ஏலதாரராக தெரிவு செய்யப்பட்டார். வெற்றிகரமான ஏலதாரரின் ஏல பெறுமதி பொறியியலாளர் மதிப்பீட்டை விட 25 சதவீதம் அதிகமாக காணப்பட்டது. இது ஒரு ஏற்றுக்கொள்ளத்தக்க ஒப்பீட்டு முறையிலே மதிப்பிடப்பட்டது. நிர்மான நடவடிக்கை உருப்படிகள் ஏதாவது அசாதாரண உயர் விகிதம் அல்லது சந்தை விகிதத்தை விட மேலான அதி கூடியதான விபரம் என்பவற்றை அறிந்து கொள்ள பொறியியலாளர் மதிப்பீட்டிலிருந்தான விகிதங்கள் மற்றும் ஏனைய ஏலதாரர்களின் சாரரியுடன் ஒப்பிடப்பட்டது. அதிகளவான விகிதங்கள் சராசரி விகிதத்திற்கு கீழாகவே காணப்பட்டது. எனவேதான் உரிய விகிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. | பாரிய வித்தியாசத்திற்கான காரணங்கள் புலனாய்வு செயற்படல் வேண்டும். |
| (இ) | வெளிநாட்டு நிதியளிப்பு செயற்திட்டங்களிற்கு கீழான கொடுப்பனவுகள் பெறுமதி சேர் வரியிலிருந்து | செயற்திட்ட கிரயம் தேவையற்றவிதத்தில் | வேலை ஆரம்பிப்பு முற்பணத்தின் முதல் தவணைக்கட்டணம் வீஏடீ | உள்நாட்டு வரிகளிற்கான |

| | | | |
|---|---|---|---|
| விலக்களிக்கப்பட்டிருப்பினும், அமுல்படுத்தல் முகவர் மீளாய்வாண்டில் உரிய நேரத்தில் வரி விலக்ககளை பெறாமல் ஒப்பந்ததாரர் மற்றும் ஆலோசகர்களிடமிருந்து ரூபா 332.48 மில்லியன் உள்நாட்டு வரிகளினை திரும்பப்பெற்றிருந்தனர். | அதிகரிக்ககூடும். | (ஏயுவு) விலக்கு பெறுவதற்கு முன்னர் செலுத்தப்பட்டிருந்தது. செயற்திட்டமானது 2020 திசெம்பர் 06 இலிருந்தே வீஏடீ (VAT) இலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது. | வரி விலக்கை பெற்றுக்கொள்ள ஆரம்ப நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| ரூபா 6,500.8 மற்றும் 550 மில்லியன் பெறுமதியான பாதீட்டு ஒதுக்கீடு முறையே வெளிநாட்டு கடன் மற்றும் ஜீஓஎஸ்எல் செலவினங்களிற்கான பயன்பாட்டிற்காக 2019 இல் பொது திறைசேரியினால் வளங்கப்பட்டிருந்தது. இருப்பினும், மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 4,406.25 மில்லியன் தொகையான வெளிநாட்டு கடன் மற்றும் 39.76 மில்லியன் தொகையான ஜீஓஎஸ்எல் மாத்திரமே 2019 ஆம் வருட முடிவில் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில், முறையே 32 சதவீதம் மற்றும் 93 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்துதல் கடன் ஒதுக்கீட்டு தொகை ரூபா 2,094.55 மில்லியன் மற்றும் ஜீஓஎஸ்எல் ஒதுக்கீட்டு தொகை ரூபா 510.24 மில்லியன் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் மந்தகதியான செயலாற்றல் காரணமாக மீளாய்வாண்டில் செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்ட நிர்மான நடவடிக்கைகளின் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம். | பீஈஎச் இன் சிவில் வேலைகளை 2019 ஜூனிலிருந்து ஆரம்பிப்பதற்கும் ஆலோசகர் மற்றும் ஒப்பந்ததாரரிற்கான வேலை ஆரம்பிப்பு முற்பணத்திற்கான போதியளவிலான நிதியினை ஒதுக்குவதற்கான நோக்கம் என்பன திட்டமிடப்பட்டிருந்தது. மேலும், மாதாந்த ஒப்பந்த கொடுப்பனவு கூட 2019 ஆம் ஆண்டிற்குள்ளான அடுத்த 5 மாதங்களிற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. எனவே, பெறப்பட்ட ரூபா 6,500 மில்லியன் போதியளவாக காணப்படும். ஒப்பந்த கையளிப்பு தாமதமாக இருந்ததுடன் ரூபா 2,182 மில்லியன் தொகை எதிர்பாராத விதமாத செலவிடப்படாமல் இருந்தது. ஜீஓஎஸ்எல் பங்கிற்காக ரூபா 550 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 40 மில்லியன் முற்பணம் மாத்திரமே விடுவிக்கப்பட்டிருந்தது. ஜீஓஎஸ்எல் இன் கீழான செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் ரூபா 332.48 மில்லியன் ஆகும். | செயன்முறை திட்டத்தினை கருத்தில் கொண்டே அடயக்கூடிய இலக்குகள் தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் அதனடிப்படையிலேயே ஒதுக்கீடு கோரப்படல் வேண்டும். |

## 3.4 செயற்திட்ட நோக்கங்களிற்கு மேலாக செய்யப்பட்ட கொடுப்பனவுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| துறைமுக நுழைவினை மேன்மையுறச்செய்த நெடுஞ்சாலைச் செயற்திட்டத்தின் திறப்புவிழா கொண்டாட்டத்தினை 07 உள்நாட்டு பத்திரிகைகளில் விளம்பரப்படுத்த ரூபா 2.17 மில்லியன் விளம்பரக் கட்டணம் செயற்திட்டத்தினால் செலவிடப்பட்டிருந்தது. | செயற்திட்டத்தின் கிரயம் அதிகரிக்கும். | திறப்பு விழா கொண்டாட்டம் கௌரவ பிரதம மந்திரி மற்றும் கௌரவ நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றேலிய வழங்கள் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் மேலும் சிலரின் பங்குபற்றலுடன் 2019 செப்தம்பர் 10 இல் நடாத்தப்பட்டது. இது தொடர்பான நடவடிக்கைகள் பத்திரிகை மீதான துனையிணை உள்ளடக்குகின்றது. | செயற்திட்டத்தின் நோக்கங்களிற்காக செயற்திட்டத்தினால் நிதியினை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| பொதுத்திரைசேறியின் முகாமைத்துவ சேவைத்திணைக்களத்தால் 30 பதவி வெற்றிடங்கள் அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதியில் 01 பிரதி செயற்திட்ட பனிப்பாளர், 02 பிரதான பொறியியலாளர், 05 செயற்திட்ட பொறியியலாளர், 03 சிரேஸ்ட பொறியியலாளர்கள், 01 செயற்திட்ட கணக்காளர் மற்றும் 01 செயற்திட்ட செயலாளர் மேலும் பல போன்ற முக்கிய | வடிவமைப்பின் ஆரம்பிப்பு மற்றும் நெடுஞ்சாலையின் நிர்மானம் என்பவற்றில் தாமதம் ஏற்படுவதற்கான சாத்தியம் | என்ஆர்சீபி இல் காணப்படும் உத்தியோகத்தர்கள் பீஈஎச் இற்காக பயன்படுத்தப்பட்டிருந்தனர். எனவே, என்ஆர்சீபீ இல் இருந்து ஒரு சிரேஸ்ட பொறியியலாளர், ஒரு செயற்திட்ட பொறியியலாளர், செயற்திட்ட செயலாளர் போன்றோர் உள்வாங்கப்பட்டிருந்தனர். செயற்திட்ட கணக்காளர், பீஈஎச் இற்கு கடமையாற்ற பதில் அடிப்படையில் என்ஆர்சீபீ நியமித்திருந்தது. இலங்கை துறைமுக அதிகார சபையிடமிருந்து | செயற்திட்த்தின் தேவைப்பாட்டிக் அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

பதவிகளிற்கான 25 பதவி வெற்றிடங்களை நிரப்ப ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ஒரு சிரேஜ்ட பொறியியலாளர் மற்றும் ஒரு செயற்திட்ட பொறியியலாளர் ஏற்கனவே நியமிக்கப்பட்டிருந்தனர். மற்றய உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்க எதிர் காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.